**தலைப்பு – 332 தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் 2021 யூன் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 17 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ஏனைய மூலதனச் செலவினம் ரூபா 902,764,920 ஆக இருந்தது. எவ்வாறாயினும், இது ரூபா 1.776,560 ஆன வீழ்ச்சியுடன் திணைக்களத்தின் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 900,988,360 ஆக காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் ஆண்டுகளில் கண்குகள் தயாரிப்பதில் திணைக்களத்தின் செலவினமாக இதனைக் கணக்கிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | 2020 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 06 ஆம் வழிகாட்டலின் 7(vi) ஆம் பந்திக்கமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 332-1-1-2 ஆம் செலவின விடயத்தின் கீழ் UNICEF செயற்திட்டத்திலிருந்து ரூபா 1,776,560 தொகையான நிதிகளின் பெறுகைகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய மூலதனச் செலவினங்களின் கீழ் கட்டுவதற்குப் பதிலாக வேறு திணைக்களங்களால் ஏற்பட்ட செலவினமாக கருதி கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

**ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலமைக் கூற்று மற்றும் ACA 6 படிவம் என்பவற்றின் பிரகாரம், திணைக்களத்தால் உடமையாக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 37,967,000 ஆக இருந்தது. எவ்வாறாயினும், திணைக்கள புத்தகங்கள் மற்றும் நிலையான சொத்து பதிவேடுகளின் கணக்காய்வின் போது வேறு நிறுவனங்களிற்கு உடமையான 13 மோட்டார் வாகனங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தது எனபது வெளிப்பட்டது. மேலும், நிதி நிலமைக் கூற்று மற்றும் ACA 6 படிவம் என்பவற்றில் பதியப்பட்டிருந்த ரூபா 800,000 பெறுமதியான கார் மற்றும் ரூபா **7,500** பெறுமதியான நான்கு மோட்டார் வாகனங்கள் கணக்காய்வில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட முடியவில்லை. மேற்குறித்த குறைபாடுகள் காரணமாக திணைக்களத்தின் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துப் பெறுமதியின் உண்மைத் தன்மை கணக்காய்வில் திருப்தியடைய முடியவில்லை. | திணைக்களத்தின் வாகனங்களை முறைப்படி கையேற்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. புலனாய்வின் பின்னர் மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நான் உங்களிற்கு தெரிவிக்கின்றேன். | திணைக்கள நிலையான சொத்துக்கள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டிற்குள் சரியாக எடுக்கப்பட வேண்டும். |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டச் செலவினங்களாக மற்றும் திணைக்களத்தின் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிக்கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து உருவாக்கப்பட்ட காசுகளின் கீழான வேறு தலைப்புகள் மீதான செலவினம் என்பன முறையே ரூபா 1,069,628,013 மற்றும் ரூபா 202,731,621 ஆன தொகையாக காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டச் செலவினங்களாக ரூபா 1,071,404,573 | அடுத்துவரும் ஆண்டுகளில் கணக்குகள் தயாரிப்பதில் திணைக்களத்தின் செலவினமாக இதனைக் கணக்கிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். . | 2020 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 06 ஆம் வழிகாட்டலின் 7(vi) ஆம் பந்திக்கமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

உம் வேறு தலைப்புகளின் செலவினமாக ரூபா 200,955,061 உம் ஏற்பட்டிருந்தது. எனவே, ஒவ்வொரு தலைப்புகளிலும் ரூபா 1,776,560 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் சில பதிவேடுகள் திணைக்களத்தால் பேணப்பட்டிருக்காததுடன் அவற்றில் சில முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணைமுறி பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைமுறி வழங்க வெண்டுமென வேண்டப்பட்ட சகல உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் விபரங்களைக் கொண்டுள்ள பிணைமுறிப்பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணைமுறி வைப்பு புத்தகம் திறப்பதற்கும் பிணைமுறி பதிவேடு பேணுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்தது. | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைமுறி வழங்க வேண்டுமென வேண்டப்பட்ட சகல உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் விபரங்களைக் கொண்டுள்ள பிணைமுறிப் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | வாகனப் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 1646 (e) இன் பிரகாரம், திணைக்களத்திற்கு சொந்தமான அந்த வாகனங்களின் விபரங்கள் கொண்டிருக்கின்ற வாகனப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | வாகனப் பதிவேடொன்று பேணுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 1646 (e) இல் குறிப்பிடப்பட்ட விபரங்களைக் கொண்டு வாகனப் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (இ) | வாகன சம்பவ குறிப்பு புத்தகம் | | |
| | நிதிப்பிரமாணம் 1645 (b) இன் பிரகாரம், வாகன சம்பவ குறிப்பு புத்தகங்கள் பேணப்பட வேண்டிய போதிலும் அவர்கள் நாளது வரையாக பேணியிருக்கவில்லை. | வாகன சம்பவ குறிப்பு புத்தகங்களை நாளது வரையாக பேணுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. | வாகன சம்பவ குறிப்பு புத்தகங்கள் முறைப்படி பேணப்பட வேண்டும். |
| (ஈ) | நட்டங்கள் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம், நட்டங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள பதிவேடொன்று தயாரிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 110 இல் குறிப்பிடப்பட்ட விபரங்களைக் கொண்டு நட்டங்கள் பதிவேடு பேணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) வாகன விபத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவிலலை. | வாகன விபத்துப் பதிவேடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வாகன விபத்துப் பதிவேடு பேணப்பட வேண்டும. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

| **கணக்காய்வு விடயம்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மூலதன செலவினங்களிற்காக பெறப்பட்ட தேறிய ஏற்பாடுகள் ரூபா 1,324.5 மில்லியனாக இருந்ததுடன் தேறிய செலவினம் ரூபா 905.02 மில்லியனாக இருந்தது. எனவே, ரூபா 419.48 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அதன்படி தேறிய ஏற்பாட்டில் சேமிப்பு 32 சதவீதமாக இருந்தது. | ஆண்டின் இறுதியில் போதிய நிதிகள் கிடைக்காமை, நாட்டிலுள்ள கொரோனா நேய் தொற்று நிலையில் வேலைத் தளங்களிலுள்ள பிரச்சனைகள், உத்தியோகத்தர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் கொடுப்பனவு செய்வதற்கு இயலாமை போன்றவற்றால் செயற்திட்டங்கள் பூர்த்தியாக்க முடியவில்லை. எனவே, உரிய ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

| **கணக்காய்வு விடயம்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீண்டெழும் மற்றும் மூலதன தன்மையான ஆறு (06) செலவின விடயங்கள் தொடர்பான தேறிய ஏற்பாடுகளின் சேமிப்பு சதவீதம் 18 சதவீதம் முதல் 68 சதவீதமான வீச்செல்லையை எடுத்திருந்தது. | ஒதுக்கப்பட்ட நிதிகள் 2020 இலிலுள்ள கோரோனா நோய் தொற்று காரணமாக சேமிப்பாக இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை கிழே பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

| | அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | இணங்காமை | | |
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலீச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 570 | | 2 ஆண்டுகளிற்க மேலாக திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் இருந்த ரூபா 27,340,534 கூட்டுத் தொகையான 287 வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் பிடிகாசினை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அந்த ஆண்டுகளின் போது பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிதிகளில் பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டங்களின் பிடிகாசினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 371 (c) | | 2020 சனவரி முதல் 2020 திசெம்பர் வரையான காலத்தின் போது 6 சந்தர்ப்பங்களில் பல்வேறு நடவடிக்கைகளிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 117,150 ஆன உப கட்டுநிதி உரிய நடவடிக்கைகளின் பின்னர் உடனடியாக தீர்க்கப் பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முழுவதும் நிலவிய கொரோனா தொற்று நோய் காரணமாக முற்பணங்கள் தீர்த்தல் தாமதப்பட்டிருந்தது. அலுவலகத்திற்கு உத்தியோகத்தர்கள் தேவைபடும் பொது மாத்திரம் அழைக்கப்படுவதுடன் ஒவ்வொரு செயற்பாடுகளும் பூர்த்தியாக்குவதில் தாமதங்கள் நிலவின. | உப கட்டுநிதி உரிய நடவடிக்கைகளின் பின்னர் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii.) | நிதிப்பிரமாணங்கள் 104 (3) மற்றும் 104 (4) | • 2020 யூலை 25 இல் விபத்து நிகழ்ந்த HP 6442 ஆம் இலக்க வானம் தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகள் விபத்து நிகழ்ந்து 7 மாதங்கள் வரையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | • HP 6442 தொடர்பான புலனாய்வுகள் பூர்த்தியாக்கப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான நிதிப் பிரமாணங்களிற்கு அமைய செயற்பட வெண்டும். |
| | | • அநுராதபுரம் அலுவலக பொறுப்பு வாய்நத உத்தியோகத்தர் அலுவலகத்தில் 2018 நவம்பர் 10 இல் நிகழ்ந்த விபத்திற்காக நட்டங்கள் நிர்ணயித்தல் மற்றும் இறுதி அறிக்கை சமர்ப்பித்தல் 2021 மே 10 வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை | • அநுராதபுரம் அலுவலகத்தில் நிகழ்ந்த நட்டங்கள் தொடர்பான அறிக்கை இன்னமும் கையளிக்கப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| | | • நுவரெலியா அலுவலக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் அலுவலகத்தில் ரூபா 101,800 பெறுமதியாக கணனி உபகரணங்கள் தொடர்பில் புலனாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருந்த போதிலும், நட்டங்களிற்காக பொறுப்புடைய நபர் அடையாளம் காணப் பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், உரிய அமைச்சு செயலாளர் மீள் புலனாய்விற்கு சிபார்சு செய்திருந்தது. எவ்வாறாயினும், அந்த புலனாய்வுகள் 2021 ஏப்ரல் 20 வரையும் பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை. | • இந்த நிகழ்வு காரணமாக அறிக்கை தயாரித்தல் தாமதப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீண்ட காலத்தில் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | நிதிப் பிரமாணம் 394 (b ) | ஆறு மாதங்களிற்கு மேலாக காசாக்கப் பட்டிருக்காத ரூபா 42,090 பொறுமதியான எட்டுக் காசோலைகள் 2021 ஏப்ரல் 30 வரையும் இரத்து செய்யப்படவோ அல்லது வேறு நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 மே 05 இல் ரூபா 25,090 பெறுமதியான காசோலைகள் மீள வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 17 பெறுமதியான காசோலைகள் 2021 மே 07 இல் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஆறு மாதங்களிற்கு மேலாக காசாக்கப்படாத இரத்து செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களிற்கமைய செயற்பட வேண்டும். |
| **(ஆ)** | **அரச நிதிச் சுற்றறிக்கைகள்** | | | |
| | (i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2.2. ஆம் பிரிவு | 2019 ஆம் ஆண்டிற்காக உள்ளடக்கப்பட்ட பௌதீக மெய்மையாய்வு அறிக்கையில் 47 அறிக்கை பிரகாரம் இனங்காணப்பட்டு அவற்றினை கைதவிர்க்கவோ அல்லது திருத்தம் செய்யப்படவோ 2021 ஏப்ரல் 30 வரையும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | அநுராதபுரம், இரத்தினபுரி, முல்லைத்தீவு, கிளிநொச்சி மன்னார் மாவட்டங்களில் அழிவடைந்த பயன்படுத்த முடியாத விடயங்களை மதிப்பீடு செய்யப் பட்டிருந்ததுடன் 2020 இன் கணப்பீட்டு சபையின் பூர்த்தியாக்கலின் பின்னர் இருக்கின்ற மாவட்டங்களில் பயன்படுத்தப்படாதவையை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அழிக்கப்பட்டவையாகவே அல்லது திருத்தப்ப ட்டவையாகவோ கணிப்பீட்டு சபையின் இனங்காணப்பட்ட விடயங்களில் உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| | (ii) 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| | - பிரிவு 3.1 | கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் பொது, திணைக்களத்தின் தலைவர் மற்றும் அப்பகுதி பிரதேச செயலாளர் என்போரால் நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகளைக் கொண்ட மூன்று உறுப்பினர் குழுவினரால் தகைமைகளின் மெய்மையாய்வின் பின்னர் சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு நிர்மாண ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களிற்கான சமுதாய நீர் பொறுப்புகளை புரிந்திருக்கின்றன என சமுதாய நீர் வழங்கல் சங்கங்களிற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு நிர்மாண ஒப்பந்தங்கள் வழங்கும் போது அரச நிதிச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |
| | - பிரிவு 3.2 (iv) | கொள்வனவு நடவடிக்கைகளை வழங்கிய பின்னர், உரிய அமைப்புகள் உப ஒப்பந்தகாரருக்கு வேலைகளை கையளித்திருந்தது. | அமைப்புகளால் உப ஒப்பந்தகாரருக்கு கையளித்தல் அறிக்கை யிடப்பட்டிருக்கவில்லை. | சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு நிர்மாண ஒப்பந்தங்கள் வழங்கும் போது அரச நிதிச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சின் 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவு | நிறுவனத்தால் உடமையாக்கப்பட்ட சகல சொத்துக்களின் விபரங்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், இது 2021 மே 30 வரையும் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்காக புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் மற்றும் உபகரணங்கள் தொடர்பான தகவல்கள் 2020 திசெம்பர் 31 இல் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு அனுப்பியிருந்தது. | அமைப்பின் சகல சொத்துக்கள் மீதான அறிக்கைகளும் உரிய திகதியில் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

**(ஈ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 6.5 ஆம் பிரிவு | மனித வளத் திட்டம் மற்றும் அமைப்பு இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நடாத்தப்படுகின்ற திறன் அபிவிருத்தி திட்டங்கள் என்பவற்றினைத் தயாரிப்பதற்காக பொறுப்புடைய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை | இந்த நோக்கத்திற்காக தனியான பிரிவு உருவாக்கப் பட்டிருந்ததுடன் பொறுப்புடைய உத்தியோகத்ர் நியமிக்கப்பட்டிருந்தனர். | மனித வளத் திட்டம் மற்றும் அமைப்பு இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சிகள் மற்றும் நடாத்தப்படுகின்ற திறன் அபிவிருத்தி திட்டங்கள் என்பவற்றினைத் தயாரித்தல் பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (ii) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களின் சம்பவக் குறிப்பு புத்தகங்களின் பரிசோதனையின் போது எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இது உடனடியாக செய்யப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டுள்ளது. | வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை பொது நிர்வாக சுற்றறிக்கைகமைய மேற்கொள்ளப்பட வெண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிநோக்கு மற்றும் பணியிலக்கு**

| கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் தாபிப்பின் பின்னர் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் முகாமைத்துவம் மீளாய்வாண்டின் இறுதியில் திணைக்களத்தை தாபித்தற்கு சட்டம் அனுமதிப்பதற்கு தவறியிருந்தது. இதன் விளைவால், பதியப்பட்ட சமுதாய அடிப்படை நிறுவனங்களை பிரமாணப் படுத்துவதற்கான அதிகாரத்தைப் போல திணைக்களத்தின் சட்ட தகுதியும் தெடர்ச்சியாக கணக்காய்வு செய்யப்படுகின்றன. | தற்போது தேசிய குடிதண்ணீர் அபிவிருத்த சட்டம் தயாரிக்கப் பட்டிருந்ததுடன் அனுமதிக்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தை தாபிப்பதற்கு உரிய சட்டம் அனுமதிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 திட்டமிடல்

| கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014/2/17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்திற்காக 2020 ஆம் அண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டு மதிப்பீடுகளின் கீழான ஏற்பாடுகளின் அனுமதி நான்கு கட்டங்களில் செய்யப் பட்டிருந்தமையால் 2020 ஆம் ஆண்டிற்கான மாதிரி செயல் நடவடிக்கை திட்டம் தயாரிப்பதற்கு இயலாதிருந்தது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்க வேண்டும். |

### 3.3 பூர்த்தியாக்காமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 22 மாவட்டங்களிலுள்ள சமுதாய அடிப்படை அமைப்புகளின் முன்னூற்றி இருபத்து ஒன்பது (329) தண்ணீர் செயற்திட்டங்கள் 2005 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை செயற்பாடற்று இருந்தது. எவ்வாறாயினும், கேகாலை, மன்னார், திருகோணமலை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் செயற்படாதிருந்த செயற்திட்டங்களை மீளச் செயற்படுத்துவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், நீர்த் தொட்டிகளின் சேதம் மற்றும் மின்சாரம், மோட்டார் வாகனங்கள் பழுதடைதல், பட்டியல்கள் செலுத்தாமை போன்ற காரணங்களால் செயற்பாடற்றிருந்த ரூபா 57.5 மில்லியன் கிரயத்தில் மன்னார் மாவட்டத்தில் எட்டு சமுதாய அடிப்படை அமைப்புக்களிற்கு சொந்தமான தண்ணீர் செயற்திட்டங்கள் பதிவுசெய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதிவரயும் அவற்றினை மீளச் செயற்பட வைப்பதற்கும் ஒப்படைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டு பரிந்துரைகள் மூலம் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் ஊடாக அடுத்த 5 ஆண்டுகளிற்குள் சகல செயற் திட்டங்களையும் புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | செயற்படாதிருந்த செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் மீள செயற்படுத்த வேண்டும். |

## 3.4 செயற்றிட்டங்கள் நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------ | --------------------------------------------- | ----------------- |
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் போது ‘‘பிரஜா ஜல அபிமனி திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்டிருந்த ரூபா 1,778 மில்லியன் பெறுமதியான 123 செயற்திட்டங்களில் ரூபா 597 மில்லியன் கிரயத்திலான முப்பத்து ஐந்து (35) செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு வரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 59,218,151 ஆன மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மாத்தறை மாவட்டத்தில் பரம்பகணன்கே கிராம சேவகர் பிரிவில் அமுலாக்கப்பட்ட பிரதிபா சமுதாய அடிப்படை அமைப்புக்களின் செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 40 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தைக் கொண்டிருந்தது. | குழாயிடலிற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அனுமதி பெறுவதில் தாமதம், மின்சார சபையால் மதிப்பீடுகள் வழங்குவதில் தாமதம் மற்றும் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நோயால் வழங்குநரால் பொருட்கள் வழங்குவதில் தாமதம் போன்றவற்றால் திணைக்களத்தின் பின்தங்கிய கட்டுப்பாடு காரணங்மாக தாமதப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் 2018 யூன் 17 இல் தொடங்கப்பட்டிருந்த ரூபா 55.9 மில்லியன் அங்குனகொலபேஸ்ச பஹலகம ஒருங்கிணைந்த சமுதாய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நிர்மாணம் 2021 மார்ச் 31 வரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட தண்ணீர் செயற்திட்டங்களில், ரூபா 50,483,201 கிரயத்திலான 25 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் நான்கு செயற்திடடங்களின் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2019 இல் மதிப்பிடப்பட்ட செயற்திட்டங்களில் இருக்கின்ற வேலைகள் பூர்த்தியாக்குவதற்கு தேவைப்பட்ட ஏற்பாடுகள் 2020 செப்தெம்பர் - திசெம்பர் வரையான காலத்தின் போது அனுமதிக்கப்பட்டிருந்தன. சில செயற்திட்டங்களிற்காக கொள்வனவுகள் மீதான கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நாட்டில் நிலவிய கொரோனா நோய் தொற்று | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | காரணமாக அந்த செயற்திட்டங்களிற்காக தேவைப்பட்ட உபகரணங்கள் வழங்குவதிலுள்ள தாமதம் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் தாமதப்பட்டிருந்தது. | |

**3.5 பணம் விடுவித்தல் தகராற்றில் முன்னேற்றமில்லாத செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரஜா ஜல அபிமனி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019 இல் மாத்தறை மாவட்டத்தில் அமுலாக்கப்பட்ட ரூபா 55,571,391 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதியில் பன்னவெல மீ- எல்ல சமுதாய அடிப்படை அமைப்புகளின் கீழ் 36,110 மீற்றர் மொத்த குழாய்கள் குழாயிடலிற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், எவ்வாறாயினும், மொத்த குழாயிடல் நீளத்தில் 2021 பெப்ரவரி 01 வரையும் 30,214 மீ மாத்திரம் செய்யப்பட்டிருந்தது எனவே, ரூபா 1,389,982 பெறுமதியான மீதமிருக்கின்ற 5,896 மீற்றர் குழாய்கள் பயன்படுத்தப் பட்டிருக்காததுடன் பன்னவெல சமுதாய அடிப்படை அமைப்பு செயலாளரின் காணியில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் கீழ் குழாயிடப்பட வேண்டியிருந்த 36,110 மீற்றர் தூரத்திற்கான மொத்தக் கொடுப்பனவுகளும் செய்யப்பட்டிருந்தது. எனவே, திறன் தொழிலாளிகளிற்காக ரூபா 1,6,760 மற்றும் மண் அகழ்தல் மற்றும் நிரப்புதலிற்காக ரூபா 1,356,080 என்பனவாக சமுதாய அடிப்படை அமைப்பிற்கு ரூபா 1,482,790 ஆன மிகைக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. | வீதி அனுமதயின்மையால் 5 கிமீ தூரத்திற்கான குழாய்கள் குழாயிடுதல் தாமதப் பட்டிருந்ததுடன் குழாய்கள் குழாயிடல் தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது. குழாய்கள் குழாயிடல் பூர்த்தி செய்யப்பட்டதாக கொடுப்பனவு செய்வதற்காக விலைப் பட்டியலை சமர்ப்பிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக புலனாய்வுகள் தொடங்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவு விலைப் பட்டியல் அனுமதித்தல் மற்றும் சான்றுபடுத்தல என்பன நிதிப் பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) மேலும், மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019 இல் மாத்தறை மாவட்டத்தில் அமுலாக்கப்பட்ட ரூபா 38,028,244 மதிப்பிடப்பட்ட கிரயத்திலான லெனாபட்டுவ சப்புகொட சக்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் நீர் வழங்கல் | குழாய்கள் குழாயிடல் பூர்த்தி செய்யப்பட்டதாக கொடுப்பனவு செய்வதற்காக விலைப் பட்டியலை சமர்ப்பிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக புலனாய்வுகள் தொடங்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவு விலைப் பட்டியல் அனுமதித்தல் மற்றும் சான்றுபடுத்தலில் நிதிப்பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |

செயற்திட்டத்தின் கீழ் 19,900 மீற்றர் குழாயிடுவதற்கு திட்டமிடப் பட்டிருந்ததுடன் அதற்காக திணைக்களம் ரூபா 5,433,810 செலவழித்து குழாய்கள் மற்றும் பொருத்திகளை கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், குழாயிடப்படுகின்ற குழாய்களின் மொத்த நீளத்தில் 2021 பெப்ரவரி 12 வரையும் 11,974 மீற்றர் மாத்திரம் இருந்ததுடன் எனவே, ரூபா 2,158,979 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தண்ணீர் குழாய்கள் 7,926 மீற்றர் குழாயிடுவதற்கு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.
எவ்வாறாயினும், செயறற்திட்டத்தின் கீழ் குழாயிட வேண்டியிருந்த 19,900 மீற்றர் முழுத் தூரத்திற்குமான விலைப்பட்டியலிற்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவு விட, திறன் தொழிலாளருக்காக ரூபா 164,490 உம் அகழ்தல் மற்றும் மீள் நிரப்புதலிற்காக ரூபா 1,726,380 உமாக செய்யப்படாத பணிகளிற்காக ரூபா 1,890,870 ஆன மிகைக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பிரிவின் பிரகாரம், வருடாந்த செயலாற்றல் அறிக்கை அரச நிதிக் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களிற்கு அமைய தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020 செத்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிக் சுற்றறிக்கையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த 2015 முதல் 2019 வரையாக காலத்திற்கான திணைக்கள வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2021 மே 31 வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 2015 முதல் 2019 வரையான காலத்திற்கு திணைக்கள வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்தல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அடுத்த 02 மாதங்களிற்குள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிதிக் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இல. 14 இல் வழங்கப்பட்ட படிவத்திற்கு அமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வெண்டியதுடன் அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்ததில் இருந்து 150 நாட்களிற்குள் வருடாநத செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) பயன்படுத்தப்படாத வகனங்கள்**<br>2021 பெப்ரவரி 15 இல் நடாத்தப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் பொது திணைக்களத்திற்கு சொந்தமான ஐந்து வாகனங்கள் ஓடும் நிலையில் உள்ளன ஆனால் திருத்தங்கள் செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் திணைக்கள வளவில் நீண்ட காலமாக தரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | தற்போது மூன்று வாகனங்கள் திருத்தப்பட்டு ஓடும் நிலையில் இருக்கின்றது. ஒரு கப் வாகனம் தொடர்பில் புலனாய்வின் பின்னர் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் மேற்படி நடவடிக்கைகள் எடுப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. அவை சார்பில் மேலதிக ஏற்படுகளை சரிசெய்த பின்னர் மிகுதி வாகனங்களை திருத்தம் செய்வதற்கான சாத்தியம் உள்ளது. | அந்த ஓடும் நிலையில் இருக்கின்ற வாகனங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) திணைக்களச் சொத்துக்களின் குறைபயன்பாடு**<br>(i) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டவாறு திருத்தப்படக் கூடிய ஐந்து வாகனங்களை திணைக்களம் வைத்திருந்த போதிலும், அவற்றினை திருத்துவதற்கு பதிலாக ஐந்து மோட்டார் வாகனங்களை வாடகை அடிப்படையில் கொள்வனவு செய்து பயன்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 3,905,625 செலவு செய்யப்பட்டிருந்தது. | 2020 இல் வாகனத் திருத்தங்களிற்கான ஒதுக்கீடுகள் சகல வாகனங்களையும் திருத்துவதற்கு போதாதிருந்தது மற்றும் வாடகை அடிப்படையில் ஐந்து வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நிதிகள் பெறப்பட்டது. இதன்படி அந்த வாகனங்கள் குருநாகல், அநுராதபுரம், புத்தளம் மற்றும் வவுனியா மாவட்டங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. தற்போது அந்த சகல வாகனங்களும் திருப்பியளிக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட ஏற்பாடுகளில் 03 வாகனங்கள் திருத்தப்பட்டதுடன் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | அந்த ஓடும் நிலையில் இருக்கின்ற வாகனங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) திணைக்களத்தின் காலி மற்றும் கண்டி மாவட்ட அலுவலகங்களிற்கு இணைக்கப்பட்ட சாரதிகள் போதாமையால் அந்த அலுவலகங்களிற்கு வழங்கப்பட்ட இரண்டு வாகனங்கள் 2020 ஒக்தோபர் மற்றும் 2020 ஆகஸ்ட் முதல் 2021 ஏப்ரல் 30 வரை பயன்படுத்தப்படாமல் பயனற்றிருந்தது. | திணைக்களத்திற்காக அனுமதிக்கப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 36 ஆக உள்ளதுடன் தற்போது இங்கு 20 வெற்றிடங்கள் உள்ளன. | சகல வாகனங்களும் பயன்படுத்தக்கூடியவாறு போதிய சாரதிகள் சேர்க்கப்பட வேண்டியதுடன் வாடகை அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்ய முன்னர் பயன்படுத்தாத ஒடும் நிலையிலுள்ள வாகனங்கள் பயன்படுத்த வேண்டும். |

**3.8 அரச உத்தியோகத்தர்களின் பிணைவைப்பு**

| கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்களின் 128(1)(n) ஆம் பிரிவிற்கமைய பிணை வைப்புக்கள் செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்கள் வழமையான சட்டங்கள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் பிணைவைப்புகள் வைப்புச் செய்யவேண்டும். எவ்வாறாயினும், இது செய்யப்பட்டிருக்காததுடன் பிணைவைப்பு நிதிப்பிரமாணங்களின் 891(1) இன் பிரகாரம் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | வைப்புப் புத்தகம் திறப்பதற்கும் பிணை வைப்பு பதிவேடு பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பிணை வைப்பு செய்யப்பட வேண்டியிருந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அதனை பெறுவதற்கும் பிணை வைப்பு பதிவேடு பேணுவதற்கும் நடவடிக்கை வேண்டும். |

**3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொள்வனவு வழிகாட்டலின் 5.6.1(அ) பந்திக்கமைய பொருட்கள் அல்லது சேவைகளிற்கான குறிப்புரைகள் உரிய கொள்வனவு நோக்கத்தை அடைவதற்கு விரிவானதாகவும் அவசியமானதாகவும் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2020 யூன் 19 இல் கோரப்பட்டிருந்த பம்புகள் மற்றும் உதிரிப்பாகங்களிற்கான கேள்வியின் குறிப்புரைகள் பூர்த்தியாக்க வேண்டியிருந்தது என்பது கொள்வனவுக் குழுவின் இறுதித் தீர்மானமாக இருந்ததுடன் கேள்வி மீள கோரப்பட்டிருந்தது எனவே, முதலாவது கேள்விகளில் ஏற்பட்ட ரூபா 177,660 ஆன தொகை சிக்கனமற்றதாக இருந்தது. | தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு குறிப்புரைகளை மேலும் சிபார்சு செய்திருந்ததுடன் குறிப்புரைகள் கேள்வி விலைகள் இருக்காதமையால் கேள்விகள் மீளக் கோரப்பட்டது. இதன்படி, கொள்வனவு நடவடிக்கைகள் குறிப்புரைகளிற்கு எதிராக மாற்றிய பின்னர் மேற்கொள்ளப்பட்டன. | கொள்வனவு செயற்பாடுகள் தொடங்குவதற்கு முன்னர் பொருட்களின் குறிப்புரைகள் சரியாக நிர்ணயிக்க வேண்டும். |

**4. நிலைபெறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்**

| கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சகலருக்குமான தண்ணீர், நிலைபேறான முகாமைத்துவம் மற்றும் சுகாதாரப் பெறுவனவுகளை உறுதிப்படுத்தல் என்பன தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் நிலைபேறான திணைக்கள இலக்குகளாக இனங்காணப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இது தொடர்பில் வழங்குவதற்கு எந்தவொரு உள்ளக சுற்றறிக்கை, வழிகாட்டல்கள் மற்றும் செயலமர்வுகள் என்பன நடாத்தப் பட்டிருக்கவில்லை. மேலும், நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனவள அமைச்சின் 2018 ஏப்ரல் 27 ஆந் திகதிய MSDW/08/65 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கைகளிற்கு இரண்டு உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் இன்னமும் நியமிக்கப்பட்டிருக்காததுடன் எதிர்காலத்தில் நியமனங்கள் அனுப்பப்படும். | நிலைபேறான அபிவிருத்திக்கு சுற்றறிக்கை வழங்குவதற்கும் உரிய வழிகாட்டல்கள் மற்றும் செயலமர்வுகள் நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இது தொடர்பில் வனவள அமைச்சால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

.

| | கணக்காய்வு விடயம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் ஒவ்வொரு ஊழியர் வகுதியின் கீழும் அனுமதிக்கப்பட்ட ஊழியரின் எண்ணிக்கையின் 44 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வெற்றிடங்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இது மொத்த அனுமதிக்கப்பட்ட பதவியணியில் 51 சதவீதத்தை விட உயர்வாக கணக்கிடப்பட்டது. | 247 மொத்த வெற்றிடங்களில் 144 வெற்றிடங்கள் நிரப்பபட்டிருந்ததுடன் மிகுதியாக இருக்கின்ற வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | அவசியமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 அளவில் பொறியியலாளர் (சிவில்) பதவிக்காக 12 உத்தியோகத்தர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் ஏழு உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்ததுடன் இருக்கின்ற ஐந்து வெற்றிடங்களை நிரப்பாமல் | உத்தியோகத்தர் குறைவு காரணமாக வெற்றிடங்களை நிரப்புதல் இயலாதுள்ளது. திணைக்களத்தின் மாவட்டங்களிற்கு இணைக்கப்பட்ட 7 உத்தி யோகத்தர்களால் திட்டமிட்ட | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பல மாவட்டங்களை மேற்பார்வை செய்வதற்கு ஒரு உத்தியோகத்தர் ஒதுக்கப்பட்டிருந்தார். | இலக்குகள் அடைந்தமைக்கான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | 30 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பதவிக்காக 2020 திசெம்பர் 31 வரையும் நிரந்தர அடிப்படையில் எந்தவொரு உத்தியோகத்தரையும் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ஐந்து ஊழியர்கள் ஒப்பந்த மற்றும் பயிற்சி அடிப்படையில் அப்பதவிக்கு சேர்க்கப்பட்டிருந்ததுடன் களக் கணக்காய்வுப் சோதனையின் போது சமுதான அடிப்படை அமைப்பு தண்ணீர் செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் பௌதீக முன்னேற்றத்தை கண்காணித்தல் போன்ற பொறியியல் வேலைகளிலும் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்த அடிப்படையில் ஐந்து தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அத்துடன் அவர்கள் மாவட்ட பொறியியலாளராக உதவிபுரிகின்றனர். இருபத்திமூன்று (23) தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். நிரந்தரமாக செர்ப்பதற்கு 2021-04-23 இல் வர்த்தமாணி அறிவித்தல் வெளியிடப்பட்டது. | -மேற்படி- |
| (ஈ) | பிரதி பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்) பதவிக்காக ஒருஒரு உத்தியோகத்தர் மாத்திரம் அனுமதிக்கப்பட்ட போதிலும், இரண்டு உத்தியோகத்தர்கள் பதவிக்காக சேர்க்கப்பட்டிருந்தனர். | மூன்று இலங்கை திட்டமிடல் சேலைகள் பதவி தேசிய சமுதாய மற்றும் நீர் வழங்கல் திணைக்களத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன்படி சிரேஸ்ட மட்டத்தில் மேலதிக உத்தியோகத்தர் எவரும் இருக்கவில்லை. | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர் எண்ணிக்கை மாத்திரம் சேர்க்கப்பட வேண்டும். |
| (உ) | 2021 பெப்ரவரி 15 இல் நடாத்தப்பட்ட கணக்காய்வு தெரிவு செவ்வையின் போது பொறுப்புடைய உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் மாவட்ட அலுவலகங்களிற்கு இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் என்போருக்கு கடமைப் பட்டியல் ஊடாக ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | மாதிரி கடமைப் பட்டியல்கள் சகல உத்தியோகத்தர் களிற்கும் வழங்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களிற்கு கடமைப் பட்டியல் ஊடாக முறையான அலுவலக கடமைகள் ஒதுக்கப்பட வேண்டும். |